**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

# MCOP.No. 65/2020, 66/2020, 67/2020

# (Joint Trial)

# PW.1.

*****

2026 ஆண்டு பிப்ரவரி திங்கள் 04-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு. செல்லப்பாண்டி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: மகேஷ்வரி** | **கணவர் பெயர்** | **: துரையரசு (எ) மங்களேஸ்வரன்** |
| **கிராமம்** | **: சுந்தரநடப்பு** | **தாலுகா** | **: சிவகங்கை** |
| **தொழில்** | **: கூலி** | **வயது** | **: 42/2026** |

---

**முதல் விசாரணை**

04.02.2026

1. நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். எனக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.1** ஆகும். குற்ற இறுதி அறிக்கை நகல் **ம.சா.ஆ. 2** ஆகும். மோட்டர் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்றிட்ட நகல் **ம.சா.ஆ. 3** ஆகும்.

2. மாதிரி வரைபடம் நகல் **ம.சா.ஆ. 4** ஆகும். விபத்து பதிவேட்டு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ. 5** ஆகும்.. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது ஆதார்

அட்டை நகல் **ம.சா.ஆ.6** ஆகும் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது வங்கி கணக்கு புத்தக நகல் **ம.சா.ஆ. 7** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

**1ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. நான் தற்போது நூறு நாள் வேலை பார்த்துவருகிறேன். எனக்கு வலது முழங்காலுக்கு கீழ் பாதத்திற்கு மேல் வெட்டு மற்றும் சீராய்ப்பு காயம் உள்ளது என்றால் சரிதான். விபத்து காயத்திற்கு அரசு மருத்துவமனையை தவிர வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் நுடவைத்திய சாலையில் வைத்தியம் பார்த்தேன், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

2. மேற்படி விபத்திற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருப்பதால் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 2ம் எதிர் மனுதாரர் இழப்பீடு வழங்க கடமை பட்டவர் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

**2 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

**1.**தாவா விபத்து தார் ரோட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். சாலையை குறுக்காக கடக்கும் போது விபத்து நடந்தது என்றால் சரியல்ல.விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

இருசக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2 ம் எதிர் மனுதாரர் எனக்கு எந்த வித இழப்பீடும் கொடுக்கவேண்டியது இல்லை என்றும் ஒரு வேளை இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் 1ம் எதிர் மனுதாரர் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு முன் 100 நாள் வேலைக்கு சென்றேன் தற்போதும் 100 நாள் வேலைக்கு திட்டத்திற்கு சென்றுவருகிறேன் என்றால் சரிதான். நான் விபத்திற்கு முன்னால் எப்படி ஆரோக்கியமாக இருந்தேனோ அதே நிலையில் தற்போதும் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெறுவதற்காக காயத்தின் தன்மையை அதிகப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர் மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.04 12:47:38 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 65/2020, 66/2020, 67/2020**

**(Joint Trial)**

**PW.2**

*****

2026 ஆண்டு பிப்ரவரி திங்கள் 04-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு. செல்லப்பாண்டி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **உமா** | **கணவர் பெயர்** | : | **செல்வகுமார்** |
| **கிராமம்** | : | **சுந்தரநடப்பு** | **தாலுகா** | : | **சிவகங்கை** |
| **தொழில்** | : | **கூலி** | **வயது** | : | **45/2026** |

---

**முதல் விசாரணை**

04.02.2026

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.சிவகங்கை அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ. 8** ஆகும்.. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.9** ஆகும் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது வங்கி கணக்கு புத்தக நகல் **ம.சா.ஆ. 10** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

**1 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தற்போது நூறு நாள் வேலை பார்த்துவருகிறேன். எனக்கு இடது முழங்காலுக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது என்றால் சரிதான்.

விபத்து காயத்திற்கு அரசு மருத்துவமனையை தவிர வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் நுடவைத்திய சாலையில் வைத்தியம் பார்த்தேன், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். மேற்படி விபத்திற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருப்பதால் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 2ம் எதிர் மனுதாரர் இழப்பீடு வழங்க கடமை பட்டவர் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா விபத்து தார் ரோட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். சாலையை குறுக்காக கடக்கும் போது விபத்து நடந்தது என்றால் சரியல்ல.விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர் மனுதாரர் எனக்கு எந்த வித இழப்பீடும் கொடுக்கவேண்டியது இல்லை என்றும் ஒரு வேளை இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் 1ம் எதிர் மனுதாரர் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2. நுட வைத்திய சாலையில் சிகிச்சை எடுத்துகொண்டதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு

முன் 100 நாள் வேலைக்கு சென்றேன் தற்போதும் 100 நாள் வேலைக்கு திட்டத்திற்கு சென்றுவருகிறேன் என்றால் சரிதான். நான் விபத்திற்கு முன்னால் எப்படி ஆரோக்கியமாக இருந்தேனோ அதே நிலையில் தற்போதும் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெறுவதற்காக காயத்தின் தன்மையை அதிகப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர் மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI Digitally signed by N SENTHIL MURALI Date: 2026.02.04 12:47:46 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.

**தலைமைக் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், சிவகங்கை.**

**MCOP.No. 65/2020, 66/2020, 67/2020**

**(Joint Trial)**

**PW.3**

*****

2026 ஆண்டு பிப்ரவரி திங்கள் 04-ம் நாள் மனுதாரர்/எதிர்மனுதாரர் என்பவரின் சாட்சியான வாக்குமூலம் 1956 ஆண்டு 10 வது விதியின்படி திரு. செல்லப்பாண்டி, கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | **சந்தான செல்வி** | **கணவர் பெயர்** | : | **வெங்கடேஸ்வரன்** |
| **கிராமம்** | : | **சுந்தரநடப்பு** | **தாலுகா** | : | **சிவகங்கை** |
| **தொழில்** | : | **கூலி** | **வயது** | : | **38/2026** |

---

**முதல் விசாரணை**

<u>04.02.2026</u>

நான் இந்த மனுவின் மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை சத்தியபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன்.சிவகங்கை அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டு சான்றிட்ட நகல் **ம.சா.ஆ. 11** ஆகும்.. அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது ஆதார் அட்டை நகல் **ம.சா.ஆ.12** ஆகும் அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட எனது வங்கி கணக்கு புத்தக நகல் **ம.சா.ஆ. 13** ஆகும். மனுப்படி உத்தரவாக வேண்டும்.

**1 ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தற்போது நூறு நாள் வேலை பார்த்துவருகிறேன். எனக்கு இடது முழங்காலுக்கு கீழ் சீராய்ப்பு மற்றும் வெட்டுகாயம் ஏற்பட்டது

என்றால் சரிதான். விபத்து காயத்திற்கு அரசு மருத்துவமனையை தவிர வேறு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேனா என்றால் நுடவைத்திய சாலையில் வைத்தியம் பார்த்தேன், அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். மேற்படி விபத்திற்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. 1ம் எதிர் மனுதாரருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருப்பதால் எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு 2ம் எதிர் மனுதாரர் இழப்பீடு வழங்க கடமை பட்டவர் என்றால் சரிதான். நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

**2ம் எதிர் மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. தாவா விபத்து தார் ரோட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். சாலையை குறுக்காக கடக்கும் போது விபத்து நடந்தது என்றால் சரியல்ல.விபத்து சமயத்தில் இருசக்கர வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுநர் உரிமம் இருக்கிறதா இல்லையா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இருசக்கர வாகன ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர் மனுதாரர் எனக்கு எந்த வித இழப்பீடும் கொடுக்கவேண்டியது இல்லை என்றும் ஒரு வேளை இழப்பீடு கொடுக்கவேண்டும் என்றால் 1ம் எதிர் மனுதாரர் மட்டுமே இழப்பீடு கொடுக்க கடமை பட்டவர் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2.நான் விபத்து ஏற்பட்டவுடன் சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் புறநோயாளியாக மட்டுமே சிகிச்சை பெற்றேன் என்றால் சரிதான். நுட வைத்திய சாலையில் சிகிச்சை

எடுத்துகொண்டதற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் சாதரண காயங்கள் என்றால் சரியல்ல. நான் விபத்திற்கு முன் 100 நாள் வேலைக்கு சென்றேன் தற்போதும் 100 நாள் வேலைக்கு திட்டத்திற்கு சென்றுவருகிறேன் என்றால் சரிதான். நான் விபத்திற்கு முன்னால் எப்படி ஆரோக்கியமாக இருந்தேனோ அதே நிலையில் தற்போதும் இருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் இழப்பீடு பெறுவதற்காக காயத்தின் தன்மையை அதிகப்படுத்தி கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாத காரணத்தினால் 2ம் எதிர் மனுதாரரை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.04 12:47:56 +0530

தலைமைக் குற்றவியல் நடுவர்,

சிவகங்கை.